**கண்டி மாநகர சபை**

**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் நகர பிதா உட்பட நகர மந்திரிமாருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கண்டி மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 343,100 இற்கான தொகையொன்று வைப்புக்கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முத்திரை கட்டணம் என ரூபா 27,176,619 தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், 2014 ஆண்டின் போது ரூபா 60,192,216 இற்கான முத்திரை கட்டண வருமானம் ஒன்று கிடைத்திருந்தமையால், ரூபா 33,015,597 இற்கான குறை ஒதுக்கம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஹேவா ஹெட்ட துணை பாதை அபிவிருத்தி செய்யும் வேலை தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த ரூபா 89,758 இற்கான தொகையொன்று கடன்பட்டோர்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உலக உரிமை நகர செயற்திட்டத்தின் நிலையான வைப்புக்கள் தொடர்பாக ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 82,685 இற்கான வட்டி வருமானம், வருமானம் ஒன்று என

கணக்கீடு செய்யப்படாமல் 2014 ஆகஸ்ட் வரை வங்கி இணக்கக் கூற்றில் மேலதிக செலவு எனக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபைக்கு சொந்தமான பிரதான நூலகத்தில் மற்றும் 06 கிளை நூலகங்களில் காணப்படும் புத்தகங்களின் பெறுமதியினை கணித்து, நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) ஏலவிற்பனை மூலம் விற்பனவு செய்யப்பட்டிருந்த லொறி வண்டியின் கிரயத்தினை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(எ) 2013 திசெம்பர் 29 அழிக்கப்பட்ட மற்றும் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்டிருந்த பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காத 14 சொத்து விடயங்களை கணக்குகளில் இருந்து அகற்றி இருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், பதவியணிக்கடன் மீதி ரூபா 152,764,208 ஆக காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம், கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 152,878,103 ஆக காணப்பட்டமையால் ரூபா 113,895 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 394,189,861 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றின் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 250,407,515 ஆகும். அம்மீதியில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்படவேண்டிய மீதி ரூபா 249,108,609 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 401,922,347 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 368,950,820 இற்கான செலவுக் கடன் கொடுத்தோர் ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 107,092,516 ஆகும். இத் தொகையில் ரூபா 54,538,146 தொகையொன்று 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிக் காணப்பட்டது.

1.3.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டம் பிரிவு 289(2) | தயாரிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளைகள் பாராளுமன்றத்தினால் அங்கிகரிக்கப்படும் வரை மற்றும் அவ் அங்கிகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கும் வரை செல்லுபடியாகாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும், மத்திய மாகாண முதலமைச்சு செயலாளரின் இலக்கம் சீபீசீ/சீஎம்எஸ்/01/06/01/4-4 கொண்ட கடிதத்தின் பிரகாரம், 2013 பெப்ரவரி 17 முதல் 2013 திசெம்பர் 31 வரை காலப்பகுதி தொடர்பாக சபை கூட்டங்கள் மற்றும் குழுப்படியாக ரூபா 964,500 தொகையொன்று சபையின் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) <u>இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை</u> | |
| (i) நி.பி. 396(டீ) | 02 வங்கி கணக்குகள் தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 158,186 பெறுமதியான வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 756 மற்றும் 757 | i. 2013 ஆண்டு தொடர்பாக பண்டக் கணிப்பீட்டு விடயங்கள் 2014 நவம்பர் பூர்த்தி செய்திருக்கவில்லை.<br>ii. 2013 பண்டக் கணிப்பீட்டின் போது சபைக்கு சொந்தமான நூலகப் புத்தகங்கள் அதில் கணிப்பீட்டுக்கு ஆளாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 229,972,207 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 192,632,737 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 37,339,470 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது, ரூபா 64,026,039 இற்கான குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக 2013 ஆண்டின் போது உபகரணங்கள் மற்றும் மூலதனச் செலவு 2012 வருடத்துடன்

தொடர்புபடுத்தும் போது நூற்றிற்கு 112 இற்கான அதிகரிப்பு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புகள் காணப்படும் விகிதாசாரம் 2.1 ஆக காணப்பட்டது. ஒட்டு மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 38 ஆகிய ரூபா 604 மில்லியன் இற்கான வருமான கடன் பட்டோர் ஆக காணப்பட்டதுடன், காசு மீதி நூற்றிற்கு 12 ஆகும். மொத்த நடைமுறை பொறுப்புகளில் நூற்றிற்கு 48 அதாவது ரூபா 215 மில்லியன் நிர்மாண வேலைகள் மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

---

2.4.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

---

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 647,471 | 618,730 | 114,087 |
| (ii) | வாடகை | 64,371 | 23,780 | 63,298 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 31,257 | 32,062 | 220 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 109,373 | 225,473 | 396,644 |

2.4.2 செலுத்துகை டவர் கட்டணம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை குடியரசின் இலக்கம் 1597/8 மற்றும் 2009 ஏப்ரல் 17 திகதியில் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் 2012 மார்ச் 09 திகதி வரையும் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றிருக்காமல் அங்கீகாரம் இன்றி நிரமாணிக்கப்பட்டிருந்த 53 செலுத்துகை டவர்களுக்காக அங்கீகாரம் இண்மைக்கான கட்டணம் பெற்றுக் கொண்டு அவற்றை சட்டரீதியாக்காமையால் ரூபா 1,180,000 விட மிகையான தொகை ஒன்றினை சபை இழக்க நேரிட்டிருந்தது.

(ii) மத்திய மாகாண சபையின், உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஜூன் 18 ஆம் திகதிய இலக்கம் 2014/04 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் செலுத்துகை டவர் அமைக்கப்பட்டிருந்த ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு

வாணிப வரி அறவிடப்படாமையால், சபைக்கு சுமாராக ரூபா 5,000,000 மிகையான தொகை ஒன்றினை இழக்க நேரிட்டுள்ளது.

(iii) இலங்கை குடியரசின் 2012 நவம்பர் 16 திகதியில் இலக்கம் 1785 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், செலுத்துகை டவரின் மூலம் வாணிப வரி அறவீடு செய்வது தொடர்பான கட்டளை ஒன்று வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்படவேண்டும் எனினம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(iv) 2010 நவம்பர் 26 திகதிய இலக்கம் 1682, 2011 நவம்பர் 04 ஆந் திகதிய இலக்கம் 1731 மற்றும் 2012 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 1785 கொண்ட வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம், தொலைபேசி செலுத்துகை டவர்களுக்கு இடவசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக குறிப்பிட்ட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டணத்தினை அறவீடு செய்யப்படாமையால் கடந்த 03 வருடங்கள் தொடர்பாக ரூபா 960,000 இனை விட மிகையான தொகை ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.4.3 சுற்றாடல் அனுமதிப் பத்திர கட்டணம்

----------------------------------------------------------

1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 இலக்கங்கள் கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்டிருந்த 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்டிருந்த விதிகளின் பிரகாரம் 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் 193 வர்த்தக நிலையங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் ரூபா 1,428,200 தொகை ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.4.4 அறிவித்தல் பலகைக் கட்டணம்

-------------------------------------------------

2012 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 1785 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த 181 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 1,748,683 இற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

----------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 41,443,200 பெறுமதியான காணி மற்றும் கட்டடங்கள் 105 அலகுகள் மற்றும் ரூபா 325,920,737 பெறுமதியான தளபாடங்கள் பொருத்துக்கள், பொறியும், பொறித் தொகுதியும், மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டி தொடர்பாக பட்டோலைகள் மீளாய்வாண்டு இறுதிவரை தயாரித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஐந்தொகையில் முற்கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 7,946,021 இற்கான ஆதனக் கடன் வட்டி 02 வருட காலம் முதல் மீளளிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2004 முதல் 2012 வரையான காலப் பகுதியில் இறந்துள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 07 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 266,795 இற்கான கடன் மீதி ஒன்று மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் சேவையை விட்டுச் சென்றுள்ள மூன்று ஊழியர்களிடம் மற்றும் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்த 08 பேரிடம் முறையே அறவிடப்பட வேண்டிய ரூபா 9,500 வும் மற்றும் ரூபா 535,311 இற்கான கடன்தொகை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ரூபா 160,696 பெறுமதியான 12 மதிப்பளிக்கப்படாத காசோலைகள் 02 முதல் 05 வருடம் வரையான காலம் முதல் அறவீடு செய்வதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் கணக்குகளில் முன் கொண்டுவரப்பட்டிருந்தன.

(உ) 02 வங்கிக் கணக்குகள் தொடர்பாக 103 சந்தர்ப்பங்களில் வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 6,316,390 தொகை தடையற்ற உத்தரவின் பிரகாரம் 12 சந்தர்பங்களில், செலுத்தப்பட்டிருந்த ரூபா 56,331 தொகையினை இனங்கண்டு தீர்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் 2014 மே மாதம் வரை வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 02 வங்கிக் கணக்குகளில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 3,256,190 இற்கான கடன் பத்திரங்கள் பெறுவனவு மற்றும் காசோலைகள் மற்றும் பணம் குறைவாக வைப்புச் செய்த சந்தர்ப்பங்கள் 116 தொடர்பாக அவற்றிற்கான காரணத்தை கண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக செயற்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு